MALAYSIA

# மறுசுழற்சி நீர் திட்டத்தை அதிகரிக்க ஆயர் சிலாங்கூருடன் கோசான் ஒத்துழைப்பு

By **Tamil Malar** - April 14, 2021




உலகின் மிகப்பெரிய ரப்பர் கையுறைகளை உற்பத்தி செய்யும் கோசான் நிறுவனம், தொழில்துறை தொழில்களுக்காக மறுசுழற்சி செய்யப்பட்ட நீளர பயன்படுத்த முதல் வாடிக்கையாளராக ஆயர் சிலாங்கூர் நிறுவனத்துடன் பதிவுச் செய்துள்ளது.

கடந்த மாதம், அயேர் சிலாங்கூர் மற்றும் இண்டா வாட்டர் நிறுவனம் ஆகியவை சிறப்பு நோக்க நிறுவனமான சென்ட்ரல் வாட்டர் (ஊநவேசயட றுயவநச) மூலம் மறுசுழற்சி செய்யக்கூடிய நீர் வழங்கல் துறையில் ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கான பங்குதாரர்களின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதில் ஆயர் சிலாங்கூர் 60 சதவீத பங்கையும் மற்றும் இண்டா வாட்டர் நிறுவனம் 40 சதவீத பங்கையும் கொண்டுள்ளது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே வேளையில் ஆயர் சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ராஜெயாவில் தற்போதுள்ள நீர்வளங்களை மேம்படுத்துவதவும் புதுப்பிக்கத்தக்கவும் நீர் விநியோகத் துறையை வழிநடத்தவும் சென்ட்ரல் வாட்டர் (ஊநவேசயட றுயவநச) என்ற வளாகத்தை அறிமுகம் செய்துள்ளது.

செத்தியா ஆலாமில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் நீரை மறுசுழற்சி செய்யும் திட்டங்களை சென்ட்ரல் வாட்டர் கவனித்துக் கொள்ளும். சென்ட்ரல் வாட்டரால் மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் பின்னர் ஆயர் சிலாங்கூரால் கோசான் வளாகத்திற்கு நேரடியாக ஒரு சிறப்பு குழாய்கள் மூலம் அனுப்பப்படும்.

அவ்வகையில், சென்ட்ரல் வாட்டர் அண்மையில் அயேர் சிலாங்கூருடன் மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் வழங்கல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதே நேரத்தில், புகழ்பெற்ற மூன்று துணை நிறுவனங்களுக்கு மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் வழங்குவதற்காக ஆயர் சிலாங்கூருக்கும் கோசானுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த முயற்சியைத் தொடர்ந்து, ஆயர் சிலாங்கூர், சென்ட்ரல் வாட்டர், இண்டா வாட்டர் ஆகியவை இணைந்து இன்னும் பல நிறுவனங்களுக்கு மறுசுழற்சி செய்யப்பட்ட நீரை விநியோகிக்க பல திட்டங்களை முன்னெடுக்கும்.

பசுமை தொழில்நுட்ப மாஸ்டர் திட்டம் 2017 – 2030 இன் கீழ் 2030 ஆம் ஆண்டில் நாட்டின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளில் 33 சதவீத மறுசுழற்சி செய்யும் தேசிய இலக்கை ஆதரிப்பதற்காக ஆயர் சிலாங்கூர் மற்றும் இண்டா வாட்டர் ஆகியவற்றின் நீண்டகால அர்ப்பணிப்பு இதுவாகும்.